OFFICE OF THE GENERAL
INTERNATIONAL HEADQUARTERS

**ஜெனரலின் 2023 ஈஸ்டர் செய்தி**

**'முடிந்தது' (யோவான் 19:30)**

புதிய ஜெனரலைத் தேர்ந்தெடுப்பதற்காக உலகெங்கிலும் உள்ள இரட்சணிய சேனை தலைவர்கள் ஒன்றிணைந்த நிலையில் இந்த ஈஸ்டர் வருகிறது. சர்வதேச தலைவர்களின் ஸ்தானத்தில் பணியாற்றும் பாக்கியம் இப்போது கமிஷனர் ரோசாலிக்கும், எனக்கும், முடிவுக்கு வருகிறது, மேலும் நாங்கள் செய்ய நினைத்ததை முடிக்க முயல்கிறோம். விரைவில், 'அது முடிந்தது' என்று நாங்கள் சொல்ல வேண்டும்.

எனவே ஈஸ்டர் தினத்தைப் பற்றி சிந்திக்கும்போது, இயேசு சிலுவையில் 'அது முடிந்தது' என கூறியது என்னை ஈர்க்கிறது. ஆனால் யோவான் 19:30 இல் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவின் உதடுகளில் இருந்து வந்த வார்த்தைகள் எவ்வளவு ஆழமானவை. அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையும், ஊழியமும், எல்லா மனித உயிர்களிலும் மிகப் பெரியது மற்றும் எல்லா ஊழியங்களிலும் மிகத் தொலைநோக்குடையது மற்றும் முழுமையானது.

*அது முடிந்தது.*

ஆனால், 'முடிந்தது' என்ற வார்த்தைகள், இயேசு தனது சொந்த அரமேக் மொழியில் பேசினார் என்பதை நாம் கருத்தில் கொள்ளும்போது இன்னும் ஆழமான அர்த்தத்தைப் பெறுகிறது, எனவே அவர் பயன்படுத்திய வார்த்தை அவர் இறப்பதற்கு முன் முடிக்கப்பட்ட முழுமையான சமர்ப்பணத்தைக் குறிக்கிறது. கிறிஸ்து, தானாக முன்வந்து இறக்க முடியாத தெய்வம், மனிதனாக மாறுவதற்கு தன்னை முற்றிலும் அடிபணிந்தார். அவ்வாறு செய்வதன் மூலம் அவர் வலி, துன்பம் மற்றும் மரணத்தை அனுபவித்தார். பிலிப்பியர் 2:5-8 இல் பவுல் இதை எதிரொலிக்கிறார், 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின்

ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.' இயேசு நம் மனித தன்மையை அணிந்து கொண்டார். அவர் நம்மைப் புரிந்துகொள்கிறார். பொது மரணதண்டனையின் உச்சக்கட்டத்தை அதன் அனைத்து அவமானங்களுடனும் அவர் அனுபவித்தார். அவர் வலி, துன்பம் மற்றும் மரணம் உட்பட - மனித அனுபவத்தில் அவர் நம்மை அடையாளம் கண்டுகொண்டது நிறைவுற்றது.

*அது முடிந்தது.*

யோவான் பின்னர் கிரேக்க மொழியில் தனது நற்செய்தியை எழுதியபோது, அவர் இயேசுவின் கடைசி வார்த்தையான 'முடிந்தது' என்பதை குறிப்பிடும்போது, நிதி உலகில் உள்ள ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி 'முழுமையாக செலுத்தப்பட்டது' என்று பதிவு செய்தார். ஆகவே, இயேசுவின் முழுமையான கீழ்ப்படிதலில், அவர் அனைத்து மனிதகுலத்திற்கும் பாவத்தின் கடனை செலுத்தினார் என்பதை நற்செய்தியாளர் நமக்கு நினைவூட்டுகிறார். சிலுவையில், நம் கணக்கு முழுவதுமாக செலுத்தப்பட்டது. பவுல், 'முழுமையாகச் செலுத்தப்பட்டது' என்பதை 'இனி நமது பாவங்களை எண்ணுவதில்லை' என்பதுடன் ஒப்பிடுகிறார். மேலும், சிலுவையின் மூலம் சமரசம் செய்வதின் முக்கிய வலியுறுத்தலை இணைக்கிறார். அவர் இதை 2 கொரிந்தியர் 5:19 இல் விவரிக்கிறார்: 'அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.' நாம் செய்த பாவம் இனி பிரச்சினை அல்ல - கணக்கை முழுவதுமாகச் செலுத்திய இரட்சகருக்கு நாம் எவ்வாறு பதிலளிப்போம் என்பதுதான் முக்கியம்.

*அது முடிந்தது.*

இந்த ஆண்டின் தொடக்கத்தில், நான் 'ஒரேதரமாக செய்து முடித்த' தேவனை உறுதிப்படுத்தினேன். ரோமர் 6:10-ல் நாம் வாசிக்கிறோம்: 'அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர்

பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.' தேவனின் நமக்கான ஏற்பாடு சிலுவையில் ஒரு புதிய உடன்படிக்கையுடன் தொடங்கியது. ஒரேயடியாக. முழுமையாக செலுத்தப்பட்டது. எபிரெயர் 9:28, கிறிஸ்து நாம் உட்பட பலருடைய பாவங்களைப் போக்க ஒருமுறை பலியிடப்பட்டதை நமக்கு நினைவூட்டுகிறது, அதே சமயம் யோவான் 1:29, 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்று அறிவிக்கிறது. அது எனது பாவம், உங்களது பாவம்.

*அது முடிந்தது.*

கிறிஸ்து ஒருமுறை இறந்தார் என்ற சத்தியத்தில், அவர் வாழ்கிறார் என்ற உண்மையும் உள்ளது, அவர் வாழ்வதால் நாமும் வாழ முடியும். ஈஸ்டர் செய்தியின் சாராம்சம் இதுதான். எது வந்தாலும், நம் சார்பாக தேவனின் செயலின் உண்மை திடமான பாறை போலவே உள்ளது. எது வந்தாலும், நாம் அவருடைய கைகளில் பாதுகாப்பாக இருக்கிறோம், அவருடைய ஏற்பாட்டைப் பற்றி முழுமையாக அறிந்திருக்கிறோம். எது வந்தாலும் பரவாயில்லை, அவருடைய கிருபை போதுமானதாகவும், அவர் உண்மையுள்ளவராகவும் இருப்பதால், நாம் 'ஜெயம் பெற்றவர்களை விட மேலாக', 'எல்லாவற்றின் மத்தியிலும் ஜெயிப்பவர்களாகவும்' வாழலாம். ரோமர் 5:8 கூறுகிறது: 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.' அது முடிந்தது! ஒருமுறை மற்றும் எல்லா காலத்திற்கும்... அது எல்லாவற்றையும் மாற்றுகிறது.

*அது முடிந்தது.*

கமிஷனர் ரோசாலியும் என்னுடன் இணைந்து உங்களுக்கு ஈஸ்டர் வாழ்த்துக்களை அனுப்புகிறார்.

**பிரையன் பெடில்**

**ஜெனரல்**